## உங்கள் கேள்வியும் வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரின் பதிலும்

**ஆதியாகமம் 2:17ல், விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் அவன் மரணமடைவான் என்று தேவன் தெரிவித்திருந்தார். ஆனால், அவன் அக்கனியைப் புசித்தவுடன் மரணமடையாதது மாத்திரமல்ல, 930 வருஷங்கள் உயிருடன் வாழ்ந்துள்ளான் (ஆதி.5:5). இதனால், தேவனுடைய கூற்று, அதாவது, விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் ஆதாம் மரணமடைவான் என்னும் எச்சரிக்கை பொய்யாகிவிட்டதா?**

விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கும் நாளில் மனிதன் மரணமடைவான் என்னும் தேவனுடைய கூற்றுக்கும் (ஆதி.2:7), அக்கனியைப் புசித்த பின்பும் ஆதாம் நீண்ட காலம் வாழ்ந்துள்ளதும் (ஆதி.5:5) நமக்கு பெரியதோர் முரண்பாடாகத் தென்பட்டாலும், வேதாகமத்தில் "மரணம்" என்னும் சொல் எத்தகைய அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்திருந்தால் இதில் எவ்வித முரண்பாடும் இல்லை என்பதை இலகுவாகப் புரிந்துகொள்வோம். ஏனெனில், வேதாகமத்தில் மரணம் என்னும் சொல் மூன்று விதமான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒன்று, சரீர மரணம். இரண்டு, ஆவிக்குரிய மரணம். மூன்று நித்திய மரணம். மேலும், யூதசிந்தனையில் மரணம் பிரிவையே குறிக்கின்றது.[1] எனவே, மானிட சரீரத்தில் இருக்கும் ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தை விட்டுப் பிரிந்து செல்வதே சரீர மரணம் ஆகும். ஆனால், ஆவிக்குரிய மரணம் மனிதர் தேவனை விட்டுப் பிரிவடைவதாகும். இதனால்தான், தேவனோடு உறவற்ற நிலையில் இருக்கும் மனிதர்கள் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாக இருப்பதாக வேதாகமம் கூறுகிறது (எபே.2:1,5). நித்திய மரணம், தேவனுடனான நிரந்தரப் பிரிவாகிய நரக ஆக்கினையாக உள்ளது. இது "அக்கினிக்கடலிலே தள்ளப்படும் இரண்டாம் மரணமாக வெளிப்படுத்தல் 20:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது. (இதைப்பற்றிய விரிவான விளக்கத்திற்கு எனது "மரணத்தின் மறுபக்கம்" என்னும் நூலைப் பார்க்கவும்).

உலகின் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறி, விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தபோது தேவன் எச்சரித்திருந்தபடியே அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரணமடைந்தனர். அதாவது, அவர்கள் தேவனைவிட்டுப் பிரிவடைந்தனர். இதனால்தான் தேவன் அவர்களைச் சந்திக்க வந்தபோது, அவர்களால் தேவனுடைய பிரசன்னத்திற்கு வரமுடியாதிருந்தது. தேவன் அவர்களிடத்திற்கு வந்தபோது அவர்கள் ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்துகொண்டனர் (ஆதி.3:8). அதுமட்டுமல்ல, அதன்பின்னர் அவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்ல முடியாதபடி ஏதேன் என்னுமிடத்திலிருந்த தோட்டத்திலுமிருந்து துரத்தப்பட்டனர் (ஆதி.3:24). பாவம் தேவனையும் மனிதனையும் பிரிக்கின்றது என்பது வேதாகமம் போதிக்கும் சத்தியமாகும் (ஏசா.59:2). இதனால்தான், தேவ கட்டளையைமீறிப் பாவம்

[1] R.Rhodes, *Commonly Misunderstood Bible Verses*, p. 20.

செய்த ஆதாமும் ஏவாளும் அவருடைய பிரசன்னத்தில் இருக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். உண்மையில், இத்தகைய ஆவிக்குரிய மரணத்தைப்பற்றியே தேவன் ஆதியாகமம் 2:7ல் குறிப்பிட்டுள்ளார். அதாவது, விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் மரணம் சம்பவிக்கும் என்று தெரிவித்துள்ளார். அவர் சரீர மரணத்தைப்பற்றி இவ்வசனத்தில் குறிப்பிடாததினாலேயே விலக்கப்பட்ட கனியைப் புசித்த பின்பும் மரணமடையாமல் இருந்த ஆதாம் 950 வருஷங்கள் வாழ்ந்துள்ளான் (ஆதி.5:5).

விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் ஏற்படுவதாகத் தேவன் குறிப்பிட்ட மரணம் சரீரப்பிரகாரமானது அல்ல என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில், அக்கனியைப் புசித்தபின்னர் ஆதாமையும் ஏவாளையும் தேவன் ஏதேன் என்னுமிடத்திலிருந்த தோட்டத்திலிருந்து துரத்தும் செயல் உள்ளது. ஏனெனில், ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்த பின்னர் அவர்கள் குடியிருந்த தோட்டத்திலிருந்து அவர்களைத் துரத்திவிடுவதற்கான காரணம் அவர்கள் அங்கிருக்கும் ஜீவவிருட்சத்தின் கனியைச் சாப்பிட்டு என்றென்றும் உயிரோடிருந்துவிடக்கூடாது என்பதை ஆதியாகமம் 3:17 அறியத்தருகின்றது. ஏனெனில், தோட்டத்திலிருந்த ஜீவவிருட்சம் மனிதர்களுக்கு ஜீவனைக் கொடுக்கும் ஆற்றல் உடையதாகவே இருந்தது.[2] இதனால்தான், பாவத்தின் பின்னர் ஆதாமும் ஏவாளும் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் மரணமடையாமல் இருந்துவிடுவார்கள் என்பதற்காக, அவர்கள் அக்கனியைப் புசித்துவிடாமல் இருப்பதற்காக அவர்களை அம்மரம் இருந்த தோட்டத்திலிருந்து துரத்திவிடும் தேவன், அவர்கள் அத்தோட்டத் திற்குள் செல்லமுடியாதபடி அதற்கு காவலும் போட்டார் (ஆதி.3:22-24).

உண்மையில், தேவன் மனிதரையும் ஏனைய உயிரினங்களையும் படைத்தபோது அவைகள் மரிக்கக்கூடிய நிலையிலேயே அவற்றை அவர் சிருஷ்டித்துள்ளார்.[3] "தேவனுடைய சுவாசத்தின் மூலம் மனிதன் உயிர்வாழக் கூடியவனாய் மாறினாலும், ஜீவவிருட்சத்தின் கனியைச் சாப்பிடுவதன் மூலமே அவனுடைய வாழ்வு தொடர்ந்திருக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கும். இல்லையென்றால் தேவன் இத்தகைய ஒரு மரத்தை உருவாக்கியிருக்க மாட்டார்."[4] ஆனால் உலகின் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்காமல், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்திருந்தால் அவர்கள் சரீரப்பிரகாரமாக மரணமடையாமல் இருக்கும் நிலையை அடைந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்ததினால் தேவன் குறிப்பிட்டவிதமாக அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரணமடைந்ததோடு, சரீரப்பிரகாரமாக உயிரோடு இருக்கும் நிலையை அடையும் சிலாக்கியத்தையும் இழந்து விட்டனர். எனவே, "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று வேதாகமம் கூறும்போது, மரணத்தின் மூவித அம்சங்களையும் உள்ளடக்கிய தண்டனையைப்பற்றியே குறிப்பிட்டுள்ளது.

---

[2] A.P.Ross, *Creation and Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 123; R.K.Hughes, *Genesis: Preaching the Word Commentary*, p. 54.
[3] J.Calvin, p. 127; J.McKeown, *Genesis: The Two Horizons Old Testament Commentary*, p. 33.
[4] Wallace, *The Eden Narratives*, p. 103.